இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 30-08-2024

# நிதித் தாக்குதல் நடத்தாதீர்!

**மழை, வெள்ள காலத்தில் தரவேண்டிய உதவித் தொகையைக் கூட தர மறுக்கும் இரக்கமற்ற ஒன்றிய அரசு, இப்போது தமிழ்நாட்டு பள்ளி மாணவர்கள் மீது நிதித் தாக்குதலைத் தொடுத்துள்ளது. தமிழ்நாட்டின் கல்வித் திட்டத்துக்காகத் தர வேண்டிய நிதியைக் கூட தர மறுக்கிறது. இத்தகைய கொடூர நடத்தைகளை இதற்கு முன் எப்போதும் பார்த்ததில்லை.**

“சமக்ரா சிக்ஷா” என்பது அந்தத் திட்டத்தின் பெயராம். பெயரே சரியில்லை. பிறகு திட்டம் எப்படி முறையாகச் செயல்படுத்தப்படும்?

ஒன்றிய அரசின் நிதி உதவியோடு மாநிலங்களில் செயல்படுத்தப்படும் திட்டம் இது. ஒன்றிய அரசின் நிதி உதவியோடு செயல்படும் திட்டம் என்றால் ஒன்றிய அரசு தானே நிதி தர வேண்டும். தருவது இல்லை. தங்கள் பெயரை மட்டும் வைத்துக் கொள்வார்கள்; கால் பங்கு நிதியை மட்டும் கொடுத்துவிட்டு, ‘பிரதமர் வீடு கட்டும் திட்டம்’ என்று சொல்லிக் கொள்வதைப் போல!

2024-25 ஆம் கல்வி ஆண்டில் 3,586 கோடியை பள்ளிக் கல்வித் துறைக்கு என நிர்ணயித்தார்கள். ஆனால் முழுமையாகத் தரவில்லை. ஒன்றிய கல்வி அமைச்சருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதிய பிறகுதான் கொஞ்சம் பணம் வந்தது. அதிலும் இன்னும் பாக்கி இருக்கிறது. இந்த ஆண்டுக்கான பணம் வரவில்லை.

“பி.எம்.ஸ்ரீ, (PM SHRI) பள்ளிகளில் தேசிய கல்விக் கொள்கையை (NEP) முழுமையாக அமல்படுத்தினால் தான், ‘சமக்ரா சிக்ஷா’ திட்டத்தின்கீழ் நிதியை வழங்குவோம்” என்று நிபந்தனை போட்டுள்ளார்கள். இரண்டு திட்டங்களும் வேறுவேறானவை. பி.எம்.ஸ்ரீ. பள்ளிகள் தனிப்பட்ட சிறப்புப் பள்ளிகள். ‘சமக்ரா சிக்ஷா’ திட்டத்தின் மூலமாக வழங்கும் பணம் என்பது ஒட்டுமொத்த கல்வித் துறைக்கானது. இரண்டையும் எப்படி ஒன்றாகக் கருதமுடியும்? இதற்கு, அது எப்படி நிபந்தனையாகும்?

எனவே, “சமக்ரா சிக்ஷா திட்டத்துக்கான நிதியை தாமதம் இல்லாமல் வழங்குங்கள்” என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியுடன், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஒன்றிய கல்வி அமைச்சரை கடந்த ஜூலை மாதமே சந்தித்து வலியுறுத்தினார்கள். நிதி வரவில்லை. பிரதமர் மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அமெரிக்கப் பயணத்துக்கு முன் அளித்த பேட்டியிலும் இதனை வலியுறுத்தினார்கள். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நேற்றைய தினம் இதனை ஊடகங்களின் மூலமாகவும் வலியுறுத்தி இருக்கிறார். இதன் பிறகும் ஒன்றிய அரசிடம் இருந்து முறையான பதில் இல்லை.

**தேசியக் கல்விக் கொள்கை பற்றி பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். “தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் மாநிலத்துக்கு நிதி கொடுத்துள்ளீர்கள். தேசிய கல்விக் கொள்கை 2020-இல் உள்ள குறிப்பிட்ட சில விதிகள் ஏற்புடையதாக இல்லை. பி.எம்.ஸ்ரீ. பள்ளிகள் திட்டத்தில் சேர புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறைந்தபட்ச மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கை இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள கல்வி தொடர்பான விஷயங்களில் மாணவர்களை பாதிக்கும் கொள்கைகளை அமல்படுத்தும் போது, அதில் ஒவ்வொரு மாநிலத்தின் நியாயமான கருத்தும் உள்ளடங்கி இருக்க வேண்டும். விவாதங்கள் தேவைப்படும் ஒரு கொள்கையினை கல்விக்கான நிதி வழங்கிடும் விஷயத்துடன் பொருத்திடக் கூடாது.” என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

“புதிய கல்விக் கொள்கையில் இணைய தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு அழுத்தம் கொடுக்கிறது. அதனால்தான் நிதியளிக்க மறுக்கிறார்கள்” என்பதையும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெளிவுபடுத்தி இருக்கிறார்.

இந்தியா முழுவதும் இருக்கும் 14 ஆயிரம் பள்ளிகளை தரம் உயர்த்தி அதை பி.எம்.ஸ்ரீ, பள்ளிகள் என்று சொல்லப் போகிறார்கள். அவ்வளவுதான். பி.எம்.ஸ்ரீ, பள்ளிகளுக்கு மட்டுமே அனைத்து வசதிகளும் தரப்படும் என்றால் மற்ற பள்ளி மாணவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள் அல்லவா? அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படும் அல்லவா? ‘அனைவர்க்கும் சமவாய்ப்பு’ என்பதன் எதிர் நிலைப்பாடு அல்லவா இது?

**தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் அனைத்துப் பள்ளிகளும் சமச்சீரான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. பள்ளிக் கல்வித் துறை சீரான, சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. அகில இந்தியக் குறியீடுகளை விட அதிகமான வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்து வருகிறது. இதனை மேலும் செம்மைப்படுத்த தமிழ்நாட்டுக்கான மாநிலக் கல்விக் கொள்கையை முன்னாள் நீதியரசர் முருகேசன் தலைமையிலான வல்லுநர் குழு ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது. இதற்கெல்லாம் முட்டுக்கட்டை போட நினைக்கிறது ஒன்றிய அரசு.**

கல்வியை பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற வாதம் வலுத்து வரும் நிலையில் தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறை மீது நிதித் தாக்குதலை நடத்துகிறது ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு.

‘சமக்ரா சிக்ஷா’ என்கிற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியினை நிறுத்தி வைக்கும் ஒன்றிய அரசின் தற்போதைய நடவடிக்கை, இலட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வி மற்றும் ஆசிரியர்களை நேரடியாக பாதிக்கும். இதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க.வுக்கு எப்போதும் எந்தக் காலத்திலும் கவலை இருந்தது இல்லை.

●●

### சான் பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளை நடைப் பயிற்சியுடன் தொடங்கி -

# முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்!

### அமெரிக்காவிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சான்பிரான்சிஸ்கோ, ஆக. 30 –**

**சான்பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளை (29.8.2024) நடைப் பயிற்சியுடன் தொடங்கி – முதலீட்டாளர் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன் என்று அமெரிக்காவிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

**சுறுசுறுப்பான நடைப் பயிற்சியுடன் சான் பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளினைத் தொடங்கி, மாலை நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### 2025 தமிழர் திருநாள் பண்டிகைக்கு

# இலவச வேட்டி சேலைகள் உற்பத்திக்கு ரூ.100 கோடி அனுமதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.30-

2025 பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படும் இலவச வேட்டி சேலைகள் உற்பத்திக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.100 கோடி அனுமதித்து உத்தரவிட்டுள்ளார்.

பொங்கல் பண்டிகையின் போது, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நியாயவிலைக் கடைகளின் மூலம் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இலவச வேட்டி சேலைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் பெடல் தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதால், கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புகளுக்கு இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இந்த நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறுவதை முன்னிட்டு இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் பொங்கல் பண்டிகைக்கு வழங்குவதற்குத் தேவைப்படும் வேட்டி சேலைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்து வழங்கிட ஏதுவாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு முன் பணமாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 100 கோடி ரூபாய் அனுமதித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின் மூலம் 2025 தைப் பொங்கல் திருநாளையொட்டி, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏழை மக்களுக்கு ஏறத்தாழ 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகளும், அதே போல ஏறத்தாழ 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் வேட்டிகளும் வழங்கப்படும்.

# 19 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.57 லட்சம் நிதி!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.30-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19 விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 57 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து இந்தோனேசியா மற்றும் ஜப்பானில் நடைபெறவிருக்கும் பாரா பாட்மிண்டன் போட்டியில் பங்கேற்க உள்ள பாரா விளையாட்டு வீரர் ஜெகதீஷ் டில்லிக்கு செலவீன தொகையாக ரூ. 2 இலட்சிற்கான காசோலையும், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கவுள்ள 6 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு செலவீன தொகையாக ரூ. 15.45 லட்சத்திற்கான காசோலையினையும், 12 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 9.55 லட்சம் மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்.

மேலும், சென்னையின் எஃப்சி ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (Chennaiyin FC Sports Private Limited) நிறுவனத்தின் விளையாட்டு வீரர்கள் 2024 முதல் 2026 வரை நடைபெற உள்ள சென்னையின் எஃப்சி கால்பந்து அணி பயிற்சி மேற்கொள்ளவும், போட்டிகள் நடத்தவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுபாட்டில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள “பி” மைதானத்தை மேம்படுத்திட ரூ. 30 இலட்சம் நிதியினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னையின் எஃப்சி ஸ்போர்ட்ஸ் பிரைவேட் நிறுவனத்திடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சென்னையின் எஃப்சி ஸ்போர்ட்ஸ் பிரைவேட் நிறுவனத்தின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அயனாவரத்தைப் பிரித்து - புதிய

# கொளத்தூர் தாலுகா உருவாக்கம்!

### புதிய பணியிடங்கள் - நிதி ஒதுக்கி உத்தரவு!

*சென்னை, ஆக 30-*

*சென்னை மத்திய வருவாய்க் கோட்டத்தில் உள்ள அயனாவரம் தாலுகாவை பிரித்து, புதிய கொளத்தூர் தாலுகாவை உருவாக்கி, புதிய பணியிடங்கள் ஏற்படுத்த ஒப்புதல் அளித்து, நிதியும் ஒதுக்கி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.*

*இது குறித்து வருவாய்த் துறை செயலர் வெளியிட்டுள்ள அறிவிக்கை விவரம்:*

*தமிழ்நாடு அரசுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் எழுதிய கடிதத்தில், சென்னை மாவட்டம், மத்திய வருவாய் கோட்டத்தில் உள்ள அயனாவரம் வருவாய் வட்டத்தை சீரமைத்து கொளத்தூர் எனும் புதிய வருவாய் வட்டம் (தாலுகா) உருவாக்குவது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துரு பரிசீலிக்கப்பட்டது.*

*மாவட்ட ஆட்சியர் கருத்துரு, வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதம் ஆகியவற்றை கவனமாக பரிசீலித்த தமிழ்நாடு அரசு, கொளத்தூர், பெரவள்ளூர், சிறுவள்ளூர் ஆகிய 3 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி கொளத்தூரை தலைமையிடமாக கொண்டு புதிய கொளத்தூர் வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.*

*மேலும், இந்த வருவாய் வட்டத்துக்கு தேவைப்படும் 42 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. புதிய வருவாய் வட்டத்துக்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவுக்கு ரூ.2.91 கோடியும், தொடரா செலவினம், ரூ.32.22 லட்சமும் ஒதுக்கி உத்தரவிடப்படுகிறது என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.*



திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஜோலார்பேட்டை நந்தினி மஹாலில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் சி.என்.அண்ணாதுரை எம்.பி., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., வி.அமலு எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.